

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை திறந்து வைத்து, "உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உயர்கல்வித்துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.3.2026) சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் 63 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "முத்தமிழறிஞர் கலைஞர் அரங்கத்தினை திறந்து வைத்து, "உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, உயர்கல்வித்துறை செயலாளர் முனைவர் பொ.சங்கர், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாவட்ட

# தீரர்கூட்டமே, திருச்சியை நிறைத்திடுவோம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அழைப்பு!

திருவண்ணாமலை, மார்ச். 5-

திருவண்ணாமலை மாவட்ட கழகத்தின் தீரர்கூட்டமே, திருச்சியை நிறைத்திடுவோம் என்று திருச்சி மாநாட்டுக்கு கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என பொதுப்பணித்துறை அமைச்சரும், வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் அழைப்பு விடுத்து ள்ளார்.



இது குறித்து அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில்...

1949ஆம் ஆண்டு கொட்டும் மழை, இராபின்சன் பூங்காவில் பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் தொடங்கப்பட்ட நமது இயக்கம், மக்களோடு கலந்து, மக்களுக்கு தொண்டாற்றி தமிழர்களை முன்னேற்றுகிற ஒரேஇயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் உருவான பின், 1956 ஆம் ஆண்டு, இதே திருச்சியில் கழகத்தின் மாநாட்டை நடத்தி, அதிலே கழகம், தேர்தலிலே போட்டியிடலாமா? என்று கழகத் தோழர்களிடம் வாக்கு எடுப்பு நடத்தி, தேர்தலில் போட்டியிட்ட இந்திய ஒன்றியத்திலே ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

அதே திருச்சியில் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் அன்பில் அழைக்கிறார்" என்று பலமுறை அழைத்து, நாம் பல மாநாடுகளை கண்டிருக்கிறோம். ஏன் திருச்சியிலே திருப்புமுனை மாநாட்டையும் நாம் நடத்தி இருக்கிறோம்.

இந்திய ஒன்றியத்தைய கபளிகரம் செய்து வரும் பாசிச பாரதிய ஜனதா கட்சி அரசும், அதன் அடிமையாம் எடப்பாடி அ.தி.மு.க.வும், தமிழகத்தை மதவாத சக்தியிடம் அடிமைபடுத்திட நினைக்கும் அவர்களுடைய எண்ணத்தை முறியடித்து 2026 சட்டப்பேரவை தேர்தலில், கழகத்தின் வெற்றிக்கு கட்டியம் கூறபோகும் மாநாடு தான், திருச்சி மாநாடு.

கழகம் 7வது முறை ஆட்சி அமைத்திடவும், நம்இனத் தலைவர், எட்டு கோடி தமிழர்களின் இதயநாயகன், உலகத் தமிழர்களின் ஒரே நம்பிக்கை, கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் முறை தமிழ்நாட்டின் அரியணை ஏறிட, திருவண்ணாமலை மாவட்ட கழகத்தின் தீரர்கூட்டமே, மார்ச் 9ல் திருச்சியை நிறைத்திடுவோம்.

மாநாட்டில் திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் என கழகத்தின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொள்ள வேண்டுமென அழைக்கிறேன்.

திருவண்ணாமலை வடக்கு தெற்கு மாவட்ட நிர்வாகிகள் தாங்கள் எத்தனை வாகனங்களில் வருகிறீர்கள் என்கிற விவரங்களை உடனடியாக மாவட்ட அலுவலகத்தில் ஒப்படைத்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்பான ஆட்சியை வழங்கியுள்ளார்! மதுரை மாவட்டம் திருமங்கலத்தில்

# முதலமைச்சர் தலைமையில் நடைபெறும் விழாவில் சுமார் ஒரு லட்சம் பேர் கழகத்தில் இணையும் நிகழ்வு!

## திருமங்கலத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

மதுரை, மார்ச்.5-

வருகிற 7ஆம் தேதி திருமங்கலம் அருகே உள்ள ராயபாளையத்தில் முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையின் கீழ் அ.தி.மு.க.வினர் மற்றும் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள் திமுகவில் இணையும் விழா நடைபெறுகிறது.



இந்த விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கான கால்கோள் ஊன்றும் விழா நேற்று நடைபெற்றது

மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மணிமாறன், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், முன்னாள் உசிலம்பட்டி எம்.எல்.ஏ. அய்யப்பன், ஓ.பி. ரவீந்திரநாத்கு மார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கால்கோள் விழாவிற்கு பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஓ. பன்னீர்செல்வம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையேற்று பல்வேறு இயக்கங்களில் இருந்து கழகத்தில் இணைகின்ற நல்ல நிகழ்வு வருகிற ஏழாம் தேதி நடைபெற உள்ளது

அந்த நிகழ்வின் முன்னேற்பாடாக கால்கோள் ஊண்றி போட்டு நிகழ்வை தொடங்கியுள்ளோம். இந்த நல்ல நிகழ்வில் எங்களை எல்லாம் அரவணைத்து செல்லும் முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார் என்பதை தாயன்புடன் எங்களை அரவணைத்து கழகத்தில் இணைத்துக் கொண்ட முதலமைச்சருக்கு நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதனை முன்னின்று தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கிறார் அமைச்சர் அவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் திமுக அருமை நண்பர்களுக்கும் நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமன்ற பொது தேர்தலில் ஐந்தாண்டு கால சிறப்பான ஆட்சியை நாட்டு மக்களுக்கு அடித்தள மக்களுக்கு எது தேவையோ அதை அறிந்து புரிந்து செயல்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் சிறப்பான ஆட்சியை முதலமைச்சர் தளபதி அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அந்த நிலை மீண்டும் தொடர வேண்டும் என்பதற்காக தான் தமிழகத்தின் அனைத்து தரப்பட்ட மக்களும் எந்தவித பாகுபாடும் இல்லாமல் அவருக்கு தார்மீக ஆதரவை தந்து கொண்டிருக்கின்ற இந்த நல்ல நேரத்தில் மீண்டும் தேர்தல் வரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த தேர்தலிலும் முதலமைச்சர் தலைமையிலான கூட்டணி மகத்தான வெற்றி பெறும். சாதனை புரிந்த ஆட்சி மீண்டும் வரவேண்டும் தங்களுடைய விருப்பத்தை தெரிவித்துள்ளார்கள் என்ற நிலை உருவாகியுள்ளது. அ.தி.மு.க. தொண்டர்கள் 70, 80 சதவீதம் மேல் தி.மு.க.வில் இணைகிற நல்ல சூழல் உள்ளது. தளபதி ஆட்சியின் திறன் அனைத்து தரப்பட்ட மக்களை அரவணைத்து செல்கின்ற அவருடைய தலைமை ஏற்று மனப்பூர்வமாக இதய பூர்வமாக இணைகின்ற நிகழ்ச்சி தான் இது.

அ.தி.மு.க.வில் பதவி சுகத்தை அனுபவித்து விட்டு தி.மு.க.வில் இணைந்து அம்மாவுக்கு துரோகம் செய்துவிட்டார் ஓபிஎஸ் என அ.தி.மு.க.வினர் குற்றச்சாட்டு குறித்த கேள்விக்கு: அவர்களுக்கு பதில் சொல்லத் தேவையில்லை

திருமங்கலத்தை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் குறித்த கேள்விக்கு:

எந்த ஒரு மகிழ்ச்சி நடந்தாலும் திருமங்கலம் இயற்கையான பெயரை எங்களுக்கு அமைந்திருக்கிறது. கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று நிறைவு பெறும் அதேபோல முதலமைச்சர் மீண்டும் முதல்வராக வருவார் என தெரிவித்தார்.

### சட்டமன்றத் தேர்தல் :

# 13 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!









சென்னை, மார்ச். 5 -

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

13 வது நாளாக நேற்று (4.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சு வார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

13வது நாளான நேற்று (04.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் பெற்று கொண்டார். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் நாளை (மார்ச் 6ஆம் தேதி) வரை நடை பெறுகிறது.